உ

சிவமயம்



# தேவதானம்
# அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி திருக்கோயில்

காமராஜர் மாவட்டம். இராஜபாளையம் வட்டம்.

# வரலாறு

( சேறைப் புராணத்தை தழுவியது )


எழுதியவர் :

வாரியார்க்கன்பன் புலவர்

**சோ. கு. குருசாமி,** பி.லிட்.டி.ஐ.எம்.

சோலைச்சேரி.



1987.

காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம்

# தேவதானம்
# அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி திருக்கோயில்

## வரலாறு

( சேறைப் புராணத்தை தழுவியது )


எழுதியவர் :
வாரியார்க்கன்பன் புலவர் :
**சோ. கு. குருசாமி,** பி. லிட். டி. ஐ. எம்
சோலைச்சேரி.


1987.

விலை: 2 - 50

உ

சாற்றுக்கவி

**நேரிசைவெண்பா**

*திகழ்தேவ தான திருத்தல மாண்பு*
*லகவுடனே தீட்டியே தந்தான் - குகனருளால்*
*நம்பி குருசாமி நாளும் நலமுடனே*
*சிம்புளென வாழ்க செழித்து.*

*அன்பன்,*
**கிருபானந்தவாரி.**

## நன்றி !

ஆன்மீக நெறிவளர்க்கும் அருளாளர் வாழ்கின்ற
அழகுச் சேறை
தான்வாழும் நச்சாடை தவிர்த்தருளும் ஈசுவரர்
திருக்கோயில்கள்
வான்முட்டப் புகழார்த்த வரலாற்றை எழுதிடவே
வாய்ப்புத் தந்த
பான்மையுள அறநெஞ்சம் பாஸ்வளான் ஆணையர்க்கு
புகன்றேன் நன்று !

### அடியேன் வேண்டுபவை

இல்லையென்று சொல்லாத இதயம் வேண்டும்
இறைவா என் மனக்கோயில் இருக்கவேண்டும்
தொல்லைகளைத் தாங்குகின்ற துணிவு வேண்டும்
தொட்டபொருள் அத்தனையும் துலங்க வேண்டும்
முல்லை மலர் ஒத்ததொரு மனது வேண்டும்
மனக்கவலை தீர்ப்பதற்கு மருந்து வேண்டும்
கல்லெழுத்து போலிருக்கும் கயிலை வாழும்
கைலாய நாதனை கழலைத் தொட்டேன்.

தேடும் பொருளெல்லாம் தெய்வத் திருப்பணிக்கு
கூடும் வகையில் கொடுத்துதவி பீடுலகில்
வாழும் திருமுருக வாரியார் பொன்னடிக்கே
நாளும் பணிசெய்வேன் நின்று !

வாரியார்க்கன்பன்

சோ. கு. குருசாமி பி. லிட்.,

# முன்னுரை

தெய்வ நல உணர்ச்சிக்கு ஊற்றுக்கண்ணாக ஆன்றோர்கள் அமைத்த அருளாலயங்கள் அமைந்துள்ளன. 'ஆலயம் தொழுவது சாலமும் நன்று' என்பர் ஆன்றோர். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற பெருமான் எழுந்தருளியுள்ள, கண்களைக் கவரும்படியான பல கோயில்கள் தமிழகத்தே உள்ளன. அத்தலங்களில் பாண்டிய நாட்டுப் பெரியகோயில் என்னும் பஞ்சபூத்த தலங்களில் ஒன்றான " ஆகாயத்தலம் " என்றழைக்கப்படுகின்ற தேவதானம் ஸ்ரீ நச்சாடை தவிர்த்தருளிய சுவாமியின் திருக்கோயில் பற்றிய தலவரலாற்றை என்னால் முடிந்த மட்டும், இறையருள் துணைக்கொண்டு எழுதியிருக்கின்றேன் இத்திருக்கோயில் தலபுராணம் சேத்தூர் பொன்னாயிரங் கவிராயர் என்பவரால் சுவைபட எழுதப்பட்டுள்ளது.

பழங்கால சின்னங்களான கோயிற் சிற்பங்களைப் பாது காப்பதிலும், தலவரலாறுகளை பொறுக்க செய்வதிலும், சமய உண்மைகளை பரப்புவதிலும் தணியாத ஆர்வம் படைத்த தமிழ்நாடு இந்துசமய அறநிலையஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு க, சுந்தரமூர்த்தி, இ. ச. ப. மற்ற சான்றோர்களும் செய்து வருகின்றார்கள் அவர்களுடை நல்ல உள்ளங்களுக் கொல்லாம் நன்றி !

இந்த நூலில் கோயிலின் உட்புற விளக்கங்கள், தலத்தின் பெருமைகள், கல்வெட்டுச் செய்திகள், புராண வரலாற்றுக் கதைகள், புராணப் பாடல்கள் ஆகியவை சேர்க்கப்பெற்றுள்ளன. இவ்வாலய பரம்பரை அறங்காவலர் திரு வி.டி.எஸ். சிவப்பிரகாசத்தேவர் என்ற துரைராஜ் குமார் அவர்கள் இவ் வரலாறு இனிது முடிவதற்காக அனைத்து உதவிகளையும் செய்தார்கள் அன்பர்கள் எல்லாரும் படித்து இன்புருக.

சோலைச்சேரி.
27 - 8 - 86.

சோ. கு. குருசாமி
சோலைச்சேரி.



# உள்ளடக்கம்


| எண் | பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1 | திருக்கோயில்களும் குறிகளும் | 1 |
| 2 | திருக்கோயில்களும் உறைவிடங்களும் | 2 |
| 3 | திருக்கோயில் அமைப்பு | 5 |
| 4 | புராணச்செய்திகள் | 6 |
| 5 | தலத்தின் பெருமைகள் | 12 |
| 6 | தினப்பூசைகளும் திருவிழாக்களும் | 13 |
| 7 | கோயிலின் வருமானம் | 17 |
| 8 | சுற்றுக்கோயில்கள் | 18 |
| 9 | ஆலயத்திற்கு அளிக்கப்பட்ட அறக்கொடைகள் | 23 |
| 10 | திருக்கோயிலின் நிர்வாகம் | 24 |
| 11 | இறை வழிபாட்டு முறை | 25 |
| 12 | சில செய்திகள் | 27 |
| 13 | தீர்த்தங்கள் | 28 |
| 14 | துதிப்பாடல்கள் | 29 |




# "திருக்கோயிலும் - குறிகளும்"

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஆன்றோர்களின் ஒருவரான ஔவைப் பாட்டி எடுத்துச் சொல்லிய வாசகம் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் அதே தமிழ்முதாட்டிதான் எடுத்துச் சொன்னார்கள். காரணம் ஆதியந்தம் கடந்த அருட்பெருஞ் சோதி வடிவான ஆண்டவன் உலகில் வாழுகின்ற எல்லாஉயிர்களையும் காக்கும் பொருட்டு, இப்பூவலகத்தில் எண்ணற்ற தலங்களில் எழுந்தருளி தனிப்பெரு கருணையை வழங்குகிறான். அவ்வாறு வழங்கும் ஆண்டவன்உறையும் இடங்களே ஆலயங்கள் எனப்படுகின்றன.

"ஆலயம்" என்ற சொல் ஒரு உண்மையை விளக்க வந்தவை. ", ஆ - லயம்" என்று பிரித்துப் பார்க்கவேண்டும். இதில் "ஆ" என்பது "உயிர்" என்றும் 'லயம்' என்பது தன்னை மறந்து நிற்கும் நிலை என்றும் பொருள்பட்டு, மனித உயிரானது ஆசபாசங்களுக்குக் கட்டுப்பட்டு தான் பிறந்த குறிக்கோளை மறந்து' "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்றும் வாழ்ந்து நிம்மதி கிடைக்காமல் ஒரு இடத்தை நாடிச்சென்று ஒன்றியிருக்கின்றான். அந்த மனமானது ஒன்றியிருக்கும் இடமே "ஆலயம்" என்கின்றனர் சான்றோர்கள்.

அங்கெங் கெனாதபடி எங்கும் பிரகாசமாக ஆனந்த மூர்த்தியாகி அருளொடு நிறைந்து விளங்குவன் இறைவானக இருந்தாலும் அவனுடைய அருள் வெளிப்படுவது ஆலயங்களின் வழியாகத்தான் என்பதை ஒரு உதாரணம் மூலம் சொல்லலாம்.

> "எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் செற்ற
> சங்கமத்தும் சத்குருவின் தன்னிடத்தும் - லிங்கத்தும்
> ஆவினுட பெல்லாமும் ஆவரித்து நிற்கினும் பால்
> பாவுமுலைக் கண்மிகுதிப் பார்"

என்பது சிவஞானப்பரகாச வெண்பா.

அதாவது பசுவின்உடம்பெல்லாம் பால் கலந்திருந்தாலும் அந்தப் பாலானது வெளிப்படுவது அதன் மடியின் மூலம் தான் என்பது போல் உலகம் எங்கும் ஆண்டவன் கலந்திருந்தாலும் அவனருள் வெளிப்படுவது ஆலயங்களின் மூலமாகத்தான் என்பது வெள்ளிடைமலை.

அந்த வகையில் ஆலயங்கள் மிகுதியாகப் பரந்து காணப்படுவது தென்னாட்டில்தான் ஆன்ம பலமும், ஆன்மீக உணர்ச்சியும் பெருக்கெடுக்கும், அழகுமிகு தென்னாட்டில் ஆலயங்களுக்குப் பஞ்சமே இல்லை. தெய்வமணமும் அருள் மணமும், அற உணர்வும் பொங்கிப்பாயும் நாடு தென்னாடு இதையே மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

"நோக்கிய இடங்க ளெல்லாம்
    நுவலருந் தலங்க ளாக
தேக்கிய தீர்த்த மாக
    சிவலிங்க மூர்த்தி யாக
ஆக்கிய தவத்தா ருளும்
    அடைந்தவனர்க் கறமென் றோதும்
பாக்கிய மாக்கி மேலே
    உய்ப்பதும் சென்னி நாடே

என்று பாடுகின்றார்கள்.

# திருக்கோயில்களும் அவற்றின் உறைவிடங்களும்

தண்ணார் தமிழ்வாழும் தென்னகத்தில் திருமால் உறையும் தலங்களும்,சிவன் உறையும் தலங்களும், முருகன்,அம்பாள் விநாயகர், மற்றும் பல சிறு தெய்வ வழிபாட்டுத் தலங்களும் எண்ணற்றவை உண்டு இந்தத் தலங்களில் பெரும்பாலும் தேவாரப்பாடல் பெற்ற தலங்களும், மங்கள சாசனம் பெற்ற தலங்களுமே அதிகம் அந்தக் கோயிலுடன் தொடர்புடைய புராணங்கள். இதிகாசங்கள், வரலாற்றுச் செய்திகள், இவைகளின் மூலமே திருக்கோயில்களின் பழமையும், பெருமையும், புகழும் ஒருவாறு தெரிய வருகிறது.

குறிப்பாக, தென்னகத்தின் தலைசிறந்த இடமாகக் கொள்ளப்படுவது பாண்டிய நாடே ஆகும் இதையே மணிவாசகப்பெருமான்.

" தண்ணார் தமிழணிக்கும்
தென்பாண்டி நாடு" என்கின்றார் தென்பாண்டி நாட்டின் பெருமைகளை விளக்க வந்த திரிசிபுரக் கவிராயர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.

புண்ணியக் குமரி என்று
பொருநை என்று வானோர்
நண்ணிய வையை என்று
நயக்கும்வெண் குடிலை என்று
அண்ணிய ஈரி ரண்டும்
அறமுக மூன்று மாகப்
பண்ணிய தவத்த தன்றே
பண்புசார் பாண்டி நாடு

என்றும்,

" நீண்ட கயிலைக்கிறை நிகழ்த்தவரு ளாலே
பூண்ட முனிமெய்த் தமிழ் புகன்றதிரு நாடு
மூண்டபகை செற்றுலக மூன்றுமர சாளும்
பாண்டிய னலங்குலவும் பாண்டி வளநாடு "

என்று திருவாதவூர்ப் புராணமும்,

" வேத நான்முகன் விதிப்பயன் தவறினும் விமலன்
பாதங்க ளானவை வழுத்திடத் தவறிடார் மல்லோர்
மோதுவாரிதி நிறைந்த நீர்வாறப்பினும் முறையா
மாதமும் மழைவழங்கும் மிந்நாட்டினின் மாதோ "

என்று சேறைத் தலபுராணமும் புகழ்படக் கூறும்.

---

## தேவதானம்

இவ்வளவு பெருமையையும் தன்னகத்தே கொண்ட புகழுடைய பாண்டி நாட்டின் பெரிய கோயில் என்றுசொல்லப் படுவது தேவதானம் அருள்மிகு நச்சாடைத்தவிர்த் தருளிய சுவாமி திருக்கோயிலே ஆகும். இந்தக் கோயில் காமராசர் மாவட்டம், இராசபாளையத்தில் இருந்து குற்றாலம் பெருவழி பாதையின் தெற்கு 8 மைல் தொலைவில் தேவதானத்திற்கு மேற்கே சுமார் 2 கி. மீட்டர் தூரத்தில் உள்ளது. மோட்டார்

வாகன வசதி நிறைந்து காணப்படுகிறது இத்தலம் முன்னாள் சேத்தூர் சமஸ்தானத்தைச் சார்ந்து விளங்கியது. தேவதானம் என்ற இத்தலத்தலத்திற்கு''அம்பிகாபுரம்'''மந்தாகினிபுரம்'' என்ற பெயர்களும் உண்டு. இந்தச் செய்தியை சேறைத் தலபுராணம் செம்மைபடப் பாடுகிறது.

'' அத்தலந் தனக்கு நாமம்
''அம்பிகா புரமே'' என்றும்
சுத்தமார்ந் திட்ட ''மந்தா
கினிபுரம்'' துகளி பாத
வித்தகப் ''பராச க்ஷேத்திரம்''
வியன் ''மதலாபுரந்'' தான்
முத்திமா நகர மென்று
மொழிந்திடுந் தெய்வ தானம்''

பெயர்க்காரணம் :

இந்தத் திருக்கோயில் தேவர்கள் யாவரும் அழகிய நகரம் என்று எண்ணி போற்றிப் புகுந்த காரணத்தால் தேவதானம் என்று பெயர் வந்ததாகக் குறிக்கின்றனர் இதைச் சேறைத் தலபுராணம்,

............... தேவராதியோர்
பொன்னகர மாமெனப் புகுந்து போற்றும் பொற்பினுற்
சொன்னகரம் நாமம் தேவதா னமென்று செற்றிடும்
தொன்னகரம் '' என்று பாடுகிறது.

மேலே குறிப்பிட்ட பொருளைவிட, ஆரம்ப காலத்தில் அடர்ந்த காடுகளும், உயர்ந்த மலைபிரதேசங்களும் கூடிய வனமாக விளங்கியது என்றும், பின்புஅந்த வனத்தில் தெய்வம் வந்து குடியேறியதால் " தெய்வ வனம் " என்று முன்னால் கூறப்பட்டது என்பது இப்பகுதி மக்களின் கூற்று இதை வைத்துப் பார்க்கும்போது ''தெய்வ வனம்'' என்ற சொல், இன்றைக்கு மக்களின் பேச்சுவழக்கில் பலபடஒலிக்கப்படுகிறது. தெய்வானம் என்றும் தேவானம் என்றும், தேவதானம் என்றும் இன்றும் இப்பகுதிமக்கள் கூறிடக் காண்கிறோம். எனவே தேவதானத்தின் உண்மை வடிவம் தெய்வ வனமே.

இந்த ஊரில் பஞ்சாயத்து ஆட்சிமுறை நடைபெற்று வருகிறது. அரசு நடத்தி வருகின்ற விதைப் பண்ணையும், கிளைத் தபால் நிலையமும் உள்ளது. மக்கள் தொகை சுமார் 6000 லிருந்து 7000பேர்கள்வரை இருப்பார்கள். பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழில் செய்து வருகின்றார்கள். இவ்வூரைச் சுற்றி, பெரியகுளம், நகரைக்குளம், வாண்டய குளம், போன்ற குளங்கள் உள்ளன. மேற்கே 7 மைல் தொலைவில் சாஸ்தா கோயிலும் மேற்குத்தொடர்ச்சிமலையும், அதைச் சுற்றிலும் சின்னஞ்சிறிய குன்றுகளும் காணப்படுகின்றன. சீதோஸ்தண நிலையும், தட்பவெட்ப நிலையும் என்றும் ஒரே சீராகவே இருக்கும்.

---

## திருக்கோயிலின் அமைப்பு

தேவதானத்திற்கு மேற்கே சுமார் 2 கி. மீட்டர் தொலைவில் பெரியகோவில் அருள்மிகு நச்சாடைதவிர்த் தருளிய சுவாமி திருக்கோயில் கிழக்கே நோக்கி உள்ளது. சுற்றிலும் வீடுகள் இல்லாதவனந்தரமாகவே உள்ளது. கோயில்முன்னே பெரியதெப்பக்குளம் உள்ளது. இக்கோயில் மூன்று பிரகாரங்களை உடையது 3 ஆம் பிரகாரம் வெளிவீதி 2 ஆம் பிரகாரத்தின் கிழக்கில்மடைப்பள்ளியும். மேற்கேதிருமலைக்கொழுந்தீஸ்வரர் கோயிலும், சரக்கொன்றை மரமும் உள்ளன, முன் மண்டபத்தில் கொடிமரமும், ஊஞ்சல் மண்டபமும், சித்தி விநாயகர், ஆறுமுகநயினார் சந்நிதிகளும். சாமான் அறைகளும், சேறை அம்பலமும் உள்ளன.

உள்ளே சென்றால் முதல் பிரகாரத்தில் தென்புறத்தில் அறுபத்துமூவர், சப்தகன்னியர், ஐயனார், தெட்சிணாமூர்த்தி போன்ற தெய்வத்திருவுருவங்களும், மேற்கே சோமாஸ்கந்தர், மகாலட்சுமி, பஞ்சலிங்கம், முருகன் முதலிய கோயில்களும் உள்ளன, இவை போன்று உள்ளே உற்சவ மூர்த்திகளும். மூலவர் நச்சாடை தவிர்த்தருளிய சுவாமிகளும் எழுந்தருளியுள்ளார்.

---

## புராணச் செய்திகள்

பக்தி வழியில் நின்று பரம்பொருளின் அருளைப்பெற்ற நமது முன்னோர்கள், பலருடைய பழைய வரலாறுகளையும் எழுதிவைத்துள்ளனர். இதை தனக்குப் பின்பு வருகின்ற தலை முறையினர் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அளவில் மிகவும் சுவைபட எழுதியுள்ளனர்.

புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றில் பல உண்மைகள் அறியக்கிடக்கின்றன. இவைகள் தத்துவங்களை உள்ளடக்கிக் கதை வடிவங்களாகவே பெரும்பாலும் காணப் படுகின்றன. தேவதானத்தின் பெருமைகள் அடங்கிய "சேறைத் தலபுராணம்" என்ற நூலும் ஒன்று. இந்த நூல் செய்யுள் வடிவமாகக் கொண்டது திருநாட்டுப்படலம் முதல் சிவ பூசைப்படலம் வரையில் 30 படலங்களைக்கொண்டது. இப்புராணத்தை எழுதியவர் சேற்றூர் பொன்னாயிரங் கவி ராயர் அவர்கள் இவர்கள். சிறந்த நாவன்மையும், கவிப் புலமையும், தென் மொழியும் வடமொழியும் கற்றுத் தேர்ந்த கவிவாணர் என்று இவருடை வாரிசுகளின் மூலம் தெரியவரும் செய்தி இவர் இயற்றிய 'தலபுராணம் படிக்கப் படிக்க பரவசம் ஊட்டுவது இத்தல புராணத்தில் அம்பாளைப் பற்றியும். ஈஸ்வரனைப் பற்றியும் பல உண்மைகள் அடங்கி யுள்ளன. இவற்றில் உள்ளவரலாறுகளை எல்லாம்சொல்லிடன் பெருகும் என்ற காரணத்தால், முக்கிய செய்திகள் சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிடல் தரும்.

1. சிவபெருமான் பாண்டிய மன்னனுக்கு சேவகம் செய்தது.
2. நச்சடை தவிர்த்து பாண்டிய மன்னனைக் காத்தது.
3. தேவியும் - கங்கையும் தவம் புரிந்தது.

போன்றவையே இன்றளவும் மக்கள் மத்தியில் பிரபலமாகப் பேசபட்டு வருகிறது.

# சிவபெருமான் பாண்டியனுக்குச் சேவகஞ் செய்தது.

பாண்டிய மன்னர்களில் வீரபாகு பாண்டியன் பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். மதுரையில் உள்ள ஓர் அந்தணன் காசிக்கு சென்றிருந்தபோது அரசன் தினந்தோறும் நகரைக் காவல் செய்து வருங்கால். அந்த அந்தணன் வீட்டையும் காவல் செய்து வந்தான், பின்பு காசிக்குச் சென்ற அந்தணன் தனது வீட்டுக்கு வந்தான். ஆனால் காவல்காரன் வேடத்தில் இருக்கும் மன்னன், அந்த அந்தணனை திருடன் என எண்ணிக் கொன்றுவிட்டான் அந்தணன் மனைவி முதலியோர் வருந்தி அரசனிடம் முறையிட்டனர் அவர்களுக்கு ஆறுதல் கூறிப் பல அறங்கள் செய்தான். எனினும் அந்தணனைக்கொன்ற பாவத்தால் "பிரம ஹத்திதோசம்" அரசனைப் பிடித்துக்கொண்டது நாட்டில் குழப்பம் ஏற்பட்டது இந்நிலையை ஒற்றர்கள் மூலம் அறிந்த சோழ மன்னனான விக்ரம சோழன் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்தான்.

பாண்டியன்படையினருக்கும் சோழன்படையினருக்கும் கடும்போர் நடந்தது பாண்டிய மன்னன் இறைபக்தி நிறைந்தவன் அப்போது பெருமான் பாண்டியன் கனவில் தோன்றி பாண்டியனுக்குத் துணையாகி தாமும் தமது பூதகணங்களும் வந்து உதவுவதாகவும், ஆகவே சோழன் தங்கியிருக்கும் பாறைக்குச் சென்று போர் புரியும் படியும் கூறியருளினார். இக்காட்சியை கவிஞர்.

"சென்று நேரியன் சேனை புகுந்து நீ
ஒன்று பூசசெடற் றுமவ்வே லையில்
குன்று போலுங் குறட்டை யேவிநாம்
வென்று நல்குவம் வெற்றியுனக் கென்றுன்"

என்று அழகுபளச் சித்தரிக்கின்றார்.

பாண்டிய மன்னனும் பரம்பொருள் காட்டிய வழிப்படி தனது ஆட்பெருஞ் சேனையுடன் சோழன் பாசறை நோக்கிச் சென்று போர் புரிந்தான் பெருமான் கனவிற் கூறியபடி போர் வீரனாகக் கோலம் பூண்டு சோழனுடன் போரிட்டு பாண்டிய னுக்குச் சேவகம் செய்து வெற்றி ஈட்டித்தந்தார். இந்தச் செய்தியை பொன்னாயிரங் கவிஞர் மிக அழகாகப் பாடு கின்றார். இதோ

நிரந்த சாதகப்படை புவியினிற் செலு நெருக்கம்
பரந்த வாரிமோ யளவிடற் கரிதென பகரச்
சுரந்த பேரருள் நாய்கள் காவிரித் துறையைப்
புரந்த சோழன்மேற் போர்செயக் குணதிசை புகுந்தான்

என்கின்றார் இவ்வாறு பரமனின் படைகளும், பாண்டிய மன்னனின் சேனைகளும் சேர்ந்து சோழ மன்னனின் சேனை களை விரட்டியடித்தன பகைவர்கள் போர் செய்ய முடியாமல் மறைந்து சென்றனர். இதுவே சிவபிரான் பாண்டியனுக்கு போர்ச்சேவகம் செய்து வெற்றி காணச்செய்த வரலாறு.

---

## நச்சாடை தவிர்த்தது

பாண்டியனுடன் போர் செய்து தோல்வியுற்ற விக்ரம சோழன் மேலும் பல தீமைகளைச் செய்யலானான் அதனால் சோழன் கண்ணிழந்து பெருமானருளால் கண் பெற்றான் கண் பெற்ற காரணத்தால், சிவபெருமானுக்கு ஓர் ஆலயம் அமைத்து பெருமானையும், தேவியையும் பிரதிட்டை செய்து வழிபட்டான். பெருமானுக்குத் " திருக்கண்ணீசர் " என்ற பெயர் வழங்குகிறது, இக்கோயில் சேத்தூரில் உள்ளது பெருமான்அருளால் பல நலங்களைப்பெற்ற சோழன் தன்னூர் திரும்பாமல் ஊழ்வினையால் பாண்டிய மன்னனுக்கு மேலும் துன்பங்களைச் செய்யலானான் பாண்டியனை கொல்லும் எண்ணத்தோடு, நஞ்சு கலந்த ஓர் நச்சாடை தன்னை தயார் செய்து,தூதுவன் மூலம் அனுப்பி?பாண்டியன் மீது போர்த்திக் கொல்லும்படி ஏற்பாடுசெய்தான் இதை அறிந்த சிவபெருமான்

*பாண்டியன் கனவில் தோன்றித் தூதுவன் கொண்டுவரும் நச்சாடையை ஓர்கோலால் எடுத்துத்தூதுவன் மேலேபோர்த்தச் சொன்னார் பாண்டிய மன்னனும் தூதன் வரவை எதிர்நோக்கி யிருந்தான் இந்தச் செய்தியை தலபுராணம்.*

"எண்ணியங்கு நேரிய னிருப்பவந்த எல்லியிற்
புண்ணியன் பணிந்த தொண்டர் புண்படாது காப்பவன்
நண்ணியன்பு செய்வபோல் நஞ்சையூட்டு மோர்கனர்
மண்ணின்முன் பகைத்த சோழன் வரவிருப்பன் நாளையே

*என்று நச்சாடை தூதுவன் மூலம் வரவிருந்த செய்தியையும்.*

"வந்தபோதில் அந்த ஆடை
வாங்கி வந்த தூதன்மேல்
வெந்துபோம் படிக்கு வேய்ந்து
மேவும் ஊறு தீரென
அந்தமாதி யில்ல வன்
அறைந்த உண்மை தேறியே
சந்தமா றுமொய்ம் பினான்
தலைவன்தான் வழுத்தினன்"

*என்று தூதன் கொண்டுவந்த நச்சாடையை தூதன் மேலேயே போர்த்தி, உனக்கு வருகின்ற துன்பத்தைக் களைக என்றும் இறைவன் சொல்வதாகச் சொல்கிறது.*

*மறுநாள் தூதுவன் நச்சாடையைக்கொண்டு வருகின் றான் பாண்டியனின் கொடுக்கின்றன இறைவன்ஆணைப்படியே கோலால் வாங்கி தூதுவன் மேலேயே போர்த்தி தன்னைக் காத்துக்கொள்கிறான் தூதுவனை நச்சாடை தீயாக்கிய செய்தியை இதோ தலபுராணம்.*

"அடைத்த முத்திரித்த பூட்டவன் கையால் விடச்சொலிக்
கிடைத்த கைப்பிரம் பிலேற்றிக்கிட்டவே வரச்சொலிப்
படைத்த நஞ்சினுடை யந்தபாவிமீது போர்த்தினன்
துடைத்த வன்சரீர முற்றும் துய்யநீறு செய்ததே"

*என்று திறம்படப் பாடுகிறது.*

இந்தச்செயலைக் கண்டப் பெரியோர்கள் இறைவனின் கருணையை எண்ணி வியந்தனர். சோழமன்னனின் வஞ்சத்தை நினைத்து ஆத்திரம் கொண்டனர் போர்த்த இருந்த நச்சாடையைத் தவிர்த்து மன்னனின் உயிரைக் காத்ததால் இறைவனுக்கு "நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி" என்ற திருநாமம் வந்தது இதை

சோதி வல்விடத் துகில்கற்றலால்
ஆதி நாமம் நச்சாடை தீர்த்தருள்
நீதியாளென நிகழ்த்தி நித்தலும்
ஒதி யாற்று தித்துஉயர்த்தி எய்தினன்

என்று பாடுகிறது.

பாண்டியனும் தனக்கு ஆபத்தில் உதவிய பெருமானைப் போற்றி புகழ்ந்து பல பணிகள் செய்தான் சோழனும் தான் செய்த தவத்தை எண்ணி வருந்திப் பெருமானுக்குப் பல திருப் பணிகள் செய்தான். தான் தங்கியிய பாசறைக்கு "விக்கிரம பாண்டியன்" எனப் பெயரிட்டு "சோழபுரம்" என்ற பகுதியை அமைத்தான் பெருமானின் கருணைத்திறத்தை வியந்து போற்றி, உறையூர் போந்தான்,

---

## 3. தேவியும், கங்கையும், தவஞ்செய்தது

பார்வதிதேவியார்தனது தோழிகளுடன் விமானம்ஏறிப் பூவுலகில் பல காட்சிகளைக் காணும் வேட்கையோடு "ஹேமகூட பர்வதம்" வந்து சில நாட்கள் தங்கி, பின் இமயம் வந்து சேர்ந்தாள் இமயத்தில் தோன்றிய கங்கையில் தேவியார் நீராடியபோது,கங்கை மிகவும் மகிழ்ந்து உலகத்தார் தன்னிடம் நீத்த பாவங்கள் நீங்கப்பெற்று, பார்வதி தேவியார் இங்கு வந்த காரணத்தைக்கேட்டார். பார்வதிதேவி நான் தவம் செய்ய வந்த செய்தியை அறிவிக்கின்றாள். உடனே கங்கையும். தானும் தவம் செய்ய விரும்புவதால், பார்வதியின் அனுமதியை எதிர்பார்த்தாள் தேவியும் சம்மதிக்கவே இருவரும்

விமானம் ஏறி, தொன்னாட்டில் தருமாசலம் சென்று கோர நதியில் நீராடிப்பெருமானை வழிபட்டனர் பார்வதி தருமாசலத் தின் வடக்கிலும், கங்கை கிழக்கிலும் தங்கித் தவமிருந்தனர். இச்செய்தியை

" பவவிரதம் புகுபான்மை யொழிக்கும்
சிவவிரதம் பலசெய்து முடித்து
நவவிர தந்திரணன் மணிபோலத்
தவவிரதந் தலையுண்டு சமித்தான் "

" கங்கையும் கீழ்த்திசை யோர் குகைகொண்டே
அங்கதின் சாயின்நர் அம்பிகை போலப்
பொங்கமு டன்தவம் செய்துமே பொற்பா
மங்கல மாக உதிந்தனன் மாதோ "

என்று தலபுராணம் சொல்லுகிறது.

இவ்வர்று தேவியும் கங்கையும் கடுந்தவம் செய்வதை அறிந்த சிவபிரான், தும்புருநாரதர் முதலியோர் பாடவும், சுரம்பையர் ஆடவும்,சுந்தமெங்கும் துந்துபி முழங்கவும் இரண்டு தேவியர்களுக்கும்காட்சி கொடுத்தார். இருவருக்கும் வேண்டிய வரங்களைக் கொடுத்தார். தேவியார் விரும்பியபடிய உமாபகி அம்மையப்பர் பெயர் நிலவும்படி செய்து பெருமான் பக்கத்தில் ஓர் பாறையில் அமர்ந்தார். இந்திரன் முதலிய தேவர்கள் சந்திரர், சூரியர், பரமன், திருமால், மந்திர பூசைகள் நடத்தி திருவோலக்கப் பரமன் விற்றிருந்ததால் அப்பாறைக்கு " திருவோலக்கப்பாறை " எனப் பெயர் ஏற்பட்டது.

" உம்பர் கள்சூழ திருவோலக் கமாக
இம்பர் இருந்து இயற்கை குறித்தே
வெம்ப செருது விண்மேற்புகு பாறைக்கு
அம்பர வாவைர் அப்பெயர் இட்டனர் "

என்பது தலவரலாறு உமாதேவி இத்தலத்தில் தவம் செய்து சிவபிரானிடத்தில் வரம் பெற்ற காரணத்தால் தேவியார்க்கு " தவம் பெற்ற நாயகி " என்னும் பெயர் வழங்குகிறது.

" சேமம் பெறத்தவம் செய்த வரத்தால்
நாமம் தவம்பெற்ற நாயகி என்று
பூமண் டலத்தொடு பொன்னுல கேத்தத்
தாமம் குலத்துத் தமைந்தது வன்றே "

என்று பெயர்க்காரணம் பற்றி தலபுராணம் பாடுகிறது

---

## ◇ தலப்பெருமைகள் ◇

தெய்வவானமான் தேவதானம் என்றயித்தலம் "மூர்த்தி-தலம் - தீர்த்தம்" என்னும் மூன்று பெருமைகளை உடையது.

1. நால்வகை நிலங்களில் குறிஞ்சி நிலமாகிய மலைப்பகுதியில் கோவில் அமைந்துள்ளது, குறிஞ்சி நிலக்கடவுள் முருகனும் கோயில் கொண்டுள்ளார்.

2, " நிலம் - நீர் - நெருப்பு - காற்று - ஆகாயம் " என்ற என்னும் பஞ்சபூதத் தலங்கள் சோழ நாட்டிலும் உள்ளது போல, பாண்டிய நாட்டிலும் உள்ளது. இவற்றில் தேவதானம் ஆகாயத் தலமாகும்.

3, இந்த ஊருக்குச் சிவபுரம் என்ற பெயரும் உண்டு. எழுத்துகளுக்கெல்லாம் அகரம் முதன்மையாயிருப்பது போல் இத்தலம் முதன்மை பெற்று விளங்குகிறது.

4. திருப்பகவன்பாறை, வெள்ளைப்பாறை, ஓலக்கப்பாறை என்னும் பாறைகளை உடையது.

5. "பலாசவனம்" என்ற பெயரை உடையது.

6. "சிருங்கம்" என்று கலைமாருல் பூசிக்கப்பெற்றது.

7. சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் பூசைகள் செய்யப்பட்ட தலம்.

8. பாண்டிய மன்னனுக்கு வந்த நச்சாடையைத் தவிர்த்து அருளிய பெருமை உடையது.

9. இந்தத் தலத்தோடு தொடர்புடைய தலம் சேத்தூரில் உள்ள திருக்கண்ணீஸ்வரர் ஆகும்.

**10. சேத்தூரின் பெருமை :**

*தேவதானம் அருகில் உள்ள சேத்தூர் என்று இன்று வழங்கிவரும் ஊர் முற்காலத்தில் "சேற்றூர்" என்றும், சேறை என்றும் வழங்கப்பட்டு வந்தது விவசாயத்திற்கான செழுமை யான சேறு பொருந்தியுள்ள காரணத்தால் சேற்றூர் என்றும் கூறலாம்.*

"அம்மை பெற்ற நாயகி அருந்தவம் புரிந்திடச்
செம்மை பெற்ற சேற்றூர் ரென்று சொல்லுநாடஞ் சேறையாய்
மும்மை பெற்ற தலங்கள் முற்றுமோதவுற்றதே"

*என்று தலபுராணம் சொல்லும் செய்தியாகும்.*

*சோழ மன்னர்களில் ஒருவனான விக்ரம சோழனுக்கு கண் கொடுத்த சுவாமியாகும். ஆகையால் இத்தெய்வத்திற்கு திருக்கண்ணீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது. அம்பாளின் பெயர்சௌந்தர்ய நாயகி என்றும்அழகிய நாச்சியார்என்றும் வழங்கி வருகிறது.*

*11. இங்கு தலவிருட்சமாக சரக்கொன்றை மரம் இருந்து வருகிறது.*

*12. இத்திருக்கோயில் முக்கியத் திருவிழாக்களாக நடைபெற்று வருகின்றன.*

**I மாசி மகத் திருவிழா**

*முதல் நாள் தபசுத் திருவிழாவும். மகத்தன்று தெப்பத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றன.*

**II வைகாசித் திருவிழா**

*வைகாசி மாதம் விசாகத்துடன் முடிவடையும் 10 நாள் உற்சவம் நடைபெறும், 9ம் திருநாளன்று (விசாகத்திற்கு முதல் நாள்) தேரோட்டம் நடைபெற்று வருகின்றன.*

**தினப்பூசைகளும் திருவிழாக்களும்**

*"ஆலயத்திற்கழகு அன்றாட பூசை" என்று பெரியவர் கள் சொல்கிற செய்தி. இந்தப் பூசைகள் ஆறுகால பூசைகள் என்று வகுக்கப்பட்டுள்ளன இப்பூசைகள் தவறுமானால் தீமை கள் ஏற்படும்.*

" கண்ணுதற் பெருமான் கோயிலிற் காலமெல்லாம்
நண்ணுதற் பூசை விதிப்படி நடத்தல் வேண்டும்
பண்ணுதல் தவறுமாயின் பார்த்திபன் தனக்குபாரிப்
அண்ணபல் லுயிர்க்கும்தீமை அணுகுதர் சரதமாமே"

என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் அம்பைப் புராணம் சொல்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 6-15 | மணி | - | திருவனந்தல் |
| காலை | 8-00 | மணி | - | விழாபூஜை |
| காலை | 8-30 | மணி | - | சிறுகாலை |
| காலை | 9-00 | மணி | - | காலசந்தி |
| காலை | 11-15 | மணி | - | உச்சிக்காலம் |
| மாலை | 5-30 | மணி | - | மாலைபூஜை |
| மாலை | 7-15 | மணி | - | அர்த்தசாம பூஜை |

இதைத்தவிர குமாரக்கோயிலில் 8 மணிக்கு விழாப் பூசையும், 11 மணிக்கு உச்சிக்காலமும், மாலை 6 மணிக்கு சாயரட்சை பூசையும், இரவு 8 மணியளவில் (அர்த்த சம பூசையும் ஆக நான்கு காலங்களில்) அபிசேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அந்தந்த நேரங்களில் சென்று வழிபடுதல் மிக்க புண்ணியத்தை தரும்.

" காலைதொழ சுற்றவினை கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்யோம்:-மாலையினில்
வந்துணிவன் தாளையே வந்திந்தால் ஏழ்பிறப்பில்
வெந்துயரம் எல்லாம் விடும் "

என்பது சான்றோர் கூற்று.

பிரதோசம் :- மேலும் பிரதோச காலத்தில் சென்று ஈசனைத் தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு, பிரதோசமானது வளர்பிறையிலும், தேய்பிறையிலும் வரும் வரும் திரயோதசி திதிகளில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும் பின்னுள்ள மூன்றேமுக்கால் நாழிகையும் கொண்ட காலம். சிவபெருமான் ஆலகாலவிசம் உண்ட காலம்.

வாழிய இருபக் கத்தும்
வனர்திர யோத சிக்கள்
ஆழியிற் கதிரோன் வீழும்
அதற்குமுன் மூன்றே முக்கால்
நாழிகை பின்னு மந்த
நாழிகை இளைய காலம்
பாழியக் கடல்ஆழ் வைப்மோர்
பகர்பிர தோசம் என்பார்

*என்று தனியூர்ப் புராணம் பாடுகிறது.*

*மேலும் இதே பிரதோசம் பற்றி சேவைத் தலபுராணம் திறம்படப் பாடுகிறது.*

திருப்பள்ளி எழுச்சிகண்டு சேவித்தோர் சிவஞானந்
சேர்ந்து வாழ்வார்
விருப்பமுடன் விழாப்பூசை தரிச்சித்தோர் மாமுனியாய்
விளங்கி வாழ்வார்
உருப்பெலாம் பணியவொளிர் காலசந்தி தரிச்சித்தோர்
உம்ப ராவார்
கருப்பையினிற் பிறந்திறவாக் கதியடைவர் உச்சியிற்
கண்டோர் தாமே!

*என்றும் :*

அத்தமயத் னத்திறுதி சேவித்தோர் சிகாந்த
னென்ன லாவார்
பத்தியொடு பாரிநிதி சேவித்தோர் பதுமனறும்
பரத்தி லாவார்
முத்தியுறும் சுனஞ்சணர் சேவித்தோர் அமைந்தன்முது
குறைவோ ராவார்
சித்தியுறும் பிரதோடஞ் சேவித்தோர் பிறதோசம்
தேய்ப்பார் தாமே"

*என்றும் பாடுகிறது.*

*இத்தலத்தில் வருடந்தோறும் பல சிறப்பான விழாக்கள் நடைபெற்று வருகின்றன. அவை வரிசைக்கிரமமாக கீழே தரப்பட்டுள்ளன.*

அ ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் பெரு விழா 10 நாட்கள் நடைபெறும் உற்சவ மூர்த்திகள் பெரிய கோயிலில் இருந்து தேவதானத்திற்குக் கொண்டுவரப் படும் மூர்த்திகள் பத்து நாட்களிலும் பல வாகனங்களில் புறப்படும் 4ம் திருநாளில் சுவாமி & அம்பாள் வெள்ளி ரிசப வாகனங்களில் காட்சி தருவார்கள் ஒன்பதாம் நாள் தேரோட்டம் நிழுகம் குமரப்பெருமானுக்குத் தேவதானத் திலேயே விழாக்கள் நடைபெறும்.

ஆ ஆனி மாதம் உத்திர நாளில் நடராசப்பெருமானுக்கு அபிசேகமும் புறப்பாடும் நடைபெறும்.

இ ஆடிப்பூர நாளில் அம்மன் கோயிலுக்கு உள்ளேயே புறப்பாடு நடைபெறும்.

ஈ ஆவணி சதுர்த்தி நாளில் விநாயகருக்கான வழிபாடுகள் சிறந்து நடைபெறும்.

உ புரட்டாசி 10 நாட்கள் வரை நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறும்.

ஊ ஐப்பசியில் இக்கோயிலில்இணைக்கோயிலாக விழங்கும் சேத்தூர் அருள்மிகு திருக்கண்ணீஸ்வரர் ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் முருகப்பெருமானுக்கும், அருள்மிகு குமாரப்பெருமானுக்கும் கந்தர்சஷ்டித் திருநாள் மிகுவிமரி சையாக நடைபெறும்.

எ மார்கழிமாதத் திருவாதிரை நாளில் நடராசப்பெருமானுக் கும். கடவல்லானுக்கும் அபிசேகமும் அலங்காரமும் நடைபெறும். மார்கழி மாதம் நாள்தோறும் அதிகாலை வேளையில் திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் இசைத்தட்டுக்கள் மூலம் ஒலிபரப்பப்படும். ஓதுவார்கள் பாடுவார்கள்.

ஏ தைப்பூசத் திருநாளில் பூசையும் புறப்பாடும் நிகழும் மாதாந்திர கடைசி பெருமான் காளை வாகனத்தில் காட்சி கொடுப்பார்.

ஓ *மாசி மக நாளில் தெப்பத் திருவிழா நடக்கும் அம்மையார் தவம் செய்யும் விழாவும் பெருமான் காட்சி தரும் விழாவும் நடைபெறும் பிறவிக் கடலில் வீழ்ந்து கரைகாணாது உழலும் உயிர்களுக்கு அபயம் தருகின்ற காட்சிகளை நினைவு படுத்தவே தெப்பத்திருவிழா நடைபெறுகிறது.*

உருமாறிப் பிறப்பென்னும் கடல் வீழ்ந்து கரைகாணா
துழலும் மக்கள்
கருமாறி அருட்தெப்பம் தனிலேற்றி முத்தியதாம்
கரையில் ஏற்றும்
பெருமான்தாம்என்பதனைஉலகுணர்த்த ஆண்டு
தொறும் பிறங்கும் தெப்பத்
திருநாளைக் கொண்டசெயல் கண்டுணர்ந்து
வாழ்மின்கள் சிறந்து நாளும்

*என்று பழம் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.*

ஓ *பங்குனிமாதம் உத்திர நாளில் சேத்தூரில் திருக்கல்யாண விழா 5 நாட்கள் நிகழும் சித்திரை நாளில் மாதப்பிறப்பு வெள்ளி ஒளி ரிசப வாகனத்தில் பெருமான் வீதி வலம் வரல்.*

" மண்ணிற் பிறந்தார் பெறும் பயன்மதி ஆகும்
அண்ணரின் அடியார் தமைமுது செய்வித்தல்
கண்ணினுல் அவர்தல் விழாபொழிவு கண்விறிதல்

*என்பது சேக்கிழார் வாக்கு.*

*இந்த வகையில் பூசைகளும் விழாக்களும் இன்றளவும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன.*

## கோயிலின் வருமானம்

*தேவதானம் அருள்மிகு நச்சடை தவிர்த்தருளிய சுவாமி ஆலயத்திற்குக் கீழ்கண்ட விபரப்படி நஞ்சை.புஞ்சை நிலங்கள் உள்ளன.*

| | |
|---|---|
| நல்செய் நிலங்கள் | - 541 - 33 ஏக்கர் |
| புல்செய் நிலங்கள் | - 120 - 12 ஏக்கர் |
| தோப்பு முதலியவை | - 190 - 28 ஏக்கர் |

இவைகள் பெரும்பாலும் தேவதானம், முத்துச்சாமிபுரம், கோயிலூர் முதலிய ஊர்களில் உண்டு.

வருடந்தோறும் ரொக்க குத்தகை மூலமாக சுமார் 85,000மும் நெல் குத்தகை மூலமாக 1200 கோட்டை வருமானம் வரும் இரண்டு கோயில்களுக்கும் உண்டியல் மூலம் சுமார் 1500|- மட்டும் வரும் சுமார் 61010-83 மதிப்புள்ளன நகைகள் உள்ளன. இககோயிலில் வைத்து திருமணம். உபநயனம், ஓமம், இவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| திருமணம் நடத்தக்கட்டணம் | ரூ. 5-00 |
| உபநயனக்கட்டணம் | ரூ. 2-00 |
| ஓமத்திற்கு | ரூ. 2-00 |

இவையே இக்கோயில்களில் வருமானம்.

## அம்மன் சன்னதி

இங்கு எழுந்தருளியிருக்கின்ற தேவியின் பெயர் தவம் பெற்ற நாயகி என்பது இந்த விமானம் கர்ளை வடிவமானது விமானத்தின் முதல் தளத்தை கூடும் சாலையாக அலங்கரிக்கின்றன பிரஸ்தாரத்தில் நந்தியின் உருவம் காணப்படுகிறது இக்கோயில் கி. பி, 14-15 நூற்றாண்டில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் என்பது கல்வெட்டாராய்ச்சியாளர்கள் கூற்று,

## சுற்றுக்கோயில்கள்

ஸ்ரீ நச்சாடை தவித்தருளிய நாயனார் கருவறையைச் சுற்றியுள்ள முதல் சுற்றுலையில் பல்வேறு தெய்வங்கள் தோற்றத்தைக் காணலாம் தென்பகுதியில் மூன்றுகால், மூன்று கை, மூன்று தலைகளைக் கொண்ட சரதேவரின் உருவத்தைக் காணலாம். சரதேவரின் முன்கை ஒன்று உடலுக்கு குறுக்கே தொங்கவிட்டு, வேழமுத்திரைக் காட்டுகிறது, ஏனைய

இரண்டாம் கை அ.:னியை ஏந்தியும், மூன்றாம் கை அபயம் அளிக்கும் நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இது கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**முருகப்பெருமான் :**

நான்கு புயங்களுடன் காணப்படும் இவ்வுருவம் பின் இரு கரங்களில் சக்திப்படையும், உக்கிரப்படையும் ஏந்தி, முன் வலக்கையால் அபயம் அளிக்கிறது. இதன் முன் இடக்கை தொடையில் உள்ளது. இவ்வுருவத்தின் நெற்றியில் கண்ணியும், மார்பில் சன்ன வீரமும், வயிற்றில் தொபந்தமும் இடையில் ஆடையும் அணி செய்கின்றது. இதன் உயரம் 91 செ. மீ. அகலம் 49செ.மீ, உள்ளூரில் வாழ்கின்ற மக்கள் இந்தச்சிலையை சப்தகன்னியருடன் இணைத்து வீரபத்திரர் என்று கருதுகின்றனர். இது தவறு இந்த உருவம் முருகப்பெருமானது சிற்பமாகும். பாண்டியர் காலத்தைச் சார்ந்தது.

**சப்த கன்னியர்கள் :**

இந்தச் சிலைகள் ஆலய த்தின் தென்புறச்சுற்றாலையில் கன்னியர் எழுவருக்கும் உரியது. இவர்கள் அனைவரும் நான்கு கரங்களுடன் காட்டப்பட்டுள்ளனர். அனைவருடைய முன் இடக்கை தொடையின் மீதும் உலக்கை அபயமளிக்கும் நிலையிலும் காணப்படுகின்றன இடது கையால் மடித்து வலது கால் தொங்கிய நிலையில் அமைந்துள்ளது.

பிராமி' கையில் கெண்டியும் அக்கமாலையும் உள்ளது.

மகேஸ்வரி' கையில் மழுவும், மானும் ஏந்திய நிலை.

கெளமாரி' சக்திப்படையும், வச்சிரப்படையும் தாங்கியுள்ளனர்.

வைஸ்ணவி' ஆழியும், சங்கமும் கையில் கொண்டுள்ள உருவம்,

வராகி' சக்கரமும், சங்கமும் கரத்தில் தாங்கியுள்ளது.

இந்திராணி' சக்தியும், வச்சிரமும் கையில் தாங்கி உள்ள வடிவம்.

'சாமுண்டி' அங்குசமும், திரிசூலமும், ஏந்திட விரித்த சடையுடன் காட்சி அளிக்கிறாள்.

கல்லிலே வடிக்கப்பட்ட இந்த வனப்புமிகு சிற்பங்கள் யாவும் இ.பி. 14-15ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலப்பாண்டியர் காலத்தவை.

யோகிஸ்வரர் : இந்தக் குழுவைச் சார்ந்த யோகீஸ்வரர்ன உருவம் அடுத்து அமர்ந்துள்ளது பின்கையில் மூன்று தலைச் சூலமும். மானும் ஏந்தி முன் வலக்கையால் கடக முத்திரை காட்டும் நிலை. முன்னம் இடக்கை தொடையின் மீது உள்ளது இதன் காலையும், இடுப்பையும் இணைக்கும் யோகப்பட்டமும் விரித்த சடாபாரமும், முகத்திலே தோன்றும் அமைதியும் தெளிவும் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

துர்க்கை : இதனை அடுத்துள்ள விஷ்ணு துர்க்கையின்சிலையும் இ.பி. 14-15ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆழியும் சங்கமும் ஏந்திய தேவியின் முடியை காண்ட மகுடமும், காதுகளில் பத்திர குண்டலமும் அணி செய்கின்றது.

மற்றவை : இதைத் தொடர்ந்து அறுபத்து மூன்று நாயன்மார்களின் சிற்பங்களும், முதல் திருச்சுற்றாலயின் தென்பகுதியில் தான் உள்ளது. இவை சேத்தூர் ஜமீனால் செய்து தரப்பட்டுள்ளது.

முதல் சுற்றில் மேற்கே சோமாஸ்கந்தா. மகாலட்சுமி, பஞ்சலிங்கம். முருகன் முதலியோருடைய சன்னதிகள் உள்ளன வடக்கே சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள் அம்மன் தவம் பெற்ற நாயகி சன்னதிகளும் அமைந்துள்ளன.

திருமலைக்கொழுந்தீசர் :

இரண்டாம் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் திருமலைக்கொழுந்தீசர் அமர்ந்திருக்கின்றனர். இங்குள்ள இந்த இறைவர் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கின்றார். பகவான் பாறைமேல் சித்தார்த்தமாகத் தோன்றியுள்ளதாக ஐதீகம். இறைவனுடைய கருவறை சதுர வடிவமானது,விமானம் நாகர வகையைச் சார்ந்தது. இக்கோயில் முகமண்டபத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. பிற்காலப் பாண்டியர்களால்

தோற்றுவிக்கப்பட்ட இக்கோயில் 17, 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இக்கோயில் சிற்பங்கள் கேரள மன்னர்களாலும் சேத்தூர் ஜாமீன்தார்களாலும் செய்து தரப்பட்டவை யாகும்.

## சேறை அம்பலம்

இக்கோயிலின் பெருமைக்கும், புகழுக்கும் எடுத்துக் காட்டாகஅமைவதுசிற்பங்களே, அந்தஅழகான சிற்பங்களைத் தாங்கி கோயிலுக்கே ஒளி தருவது அங்கு அமைந்துள்ள ம ண் ட ப ங் க ள் மண்டபங்களின் வரலாறுகளையெல்லாம் விவரிப்பின் பெருகும் என்ற காரணியத்தால், மண்டபங்களின் பெயர்களை மட்டும் சுட்டி,சேறை அம்பலம் பற்றிய சில தகவல் களை மட்டும்தெரிவிக்கின்றேன்.

1. மகா மண்டபம்
2. மணி மண்டபம்
3. ஊஞ்சல் மண்டபம்
4. நந்தி மண்டபம்
5. கர்பத்தடி மண்டபம்
6. சேறை அம்பலம்

போன்றவைகள் ஆகும்.

**மகா மண்டபம் :**

இந்தமண்டபம் செவ்வக வடிவமானது இம்மண்டபத்தை நான்கு தூண்கள் தாங்கியுள்ளன. முதலாவது தூணில் இரண்டு வரியில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதன் வாசகம் "வீரபாண்டியச் செதுலயம் தன்மம்"என்பது இந்தக் கல்வெட்டு கி. பி. 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**மணி மண்டபம் :**

17-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த பாண்டிய மன்னர் காலத்து அழகிய சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங் கியது இந்த மணி மண்டபமே சிற்பங்கள் வடிக்கப்பட் அழகிய தூண்கள் தாங்கி உள்ளன. இத்தூண்களில் "தாருகா வனத்துக் காட்சி" ஒன்று தத்ரூபமாக வடிக்கப்பட்டுள்ளது.

ஊஞ்சல் மண்டபம் :

இந்த மண்டபத்தில் இடம்புரி விநாயகர், கையிலே வெண்ணெய் ஏந்திய நவநீத கிருஷ்ணன் அழகிய சிலைகள் வழிபாட்டில் உள்ளது.

நந்தி மண்டபம் :

இம்மண்டபத்தை பத்துத்தூண்கள் தாங்கியுள்ளன. எண்பட்டை வடிவானவை. இம்மண்டபத்தின் நடுவே அழகிய நந்தி அமர்ந்துள்ளது இம்மண்டபத்தைச் சுற்றி அமைந்துள்ள. திருச்சுற்றுஇலயில் காணப்படும்திண்ணைகளின் மீதுதற்போது பைரவர், சந்திரன், சூரியன், அதிகார நந்தி ஆகியோரின் அழகிய கற்சிலைகள் தோற்றம் அளிக்கின்றன.

கம்பத்தடி மண்டபம் :

இது மிகப்பெரிய மண்டபம் செவ்வக வடிவமானது. இம்மண்டபம் 18 தூண்கள் தாங்கியுள்ளன. இந்தத் தூண்களின் மீது அன்னப்பறவைகள், அர்ச்சுனன் தபசு, போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது.

இம்மண்டபத்தின் நடுவே நீண்ட பெரும் ஆமையின் உருவம் ஒன்று தனிக் கல்லிலே செய்து தரையில் பதிக்கப் பட்டுள்ளது. இத்தகையை மரபு தமிழ்நாட்டுக் கோயில்களில் காண்பது அரிது.

எனினும் கொடுங்களூர், திருஞ்சூர் திருவஞ்சித்தலம், திருவனந்தபுரம்,கோட்டயம், ஆகிய பகுதிகள் உள்ள கேரளநாட்டுக் கோயில்களில் மட்டுமே காணப்படும். இன்னும் சில சிலாலங்களில் கொடிக்கம்பத்தின் கீழும் ஆமை உருவம் காட்டப்படுதல் வழக்கம் காரணம் கொடி மரத்தை வணக்கம் செய்து ஆலயத்தினுள் செல்லும் அன்பர்கள் தனது “ஐந்து பொறிகளையும் அடக்கி, ஆசபாசங்களைக் கட்டுப்படுத்திச் செல்லவேண்டும் என்பதைக்குறிப்பால் தெரிவிக்கும் பொருட்டே, ஆபத்து வருங் காலத்து தனதுபொறிகள் ஐந்தையும் உள்ளிழுத்துத்தன்னைக் காப்பாற்றும் ஆமையை அந்தப் பீடத்தில் பதிக்கப்பட்டுள்ளது இதுவே இதன் தத்துவம்,

**சேறை அம்பலம் :**

கம்பத்தடி மண்டபத்தை ஒட்டி வடபுறம், சேறை அம்பலம் உள்ளது. இந்த அம்பலத்தின் உட்சுற்றை நான்கு தூண்களும் வெளிச்சுற்றை ஆறு தூண்களும் தாங்கி அணிசெய்கின்றது. உட்சுற்று நடுவே அழகிய மேடை ஒன்று உள்ளது, இதன்மேல் பகுதியை நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட மர விமானம் அலங்கரிக்கின்றது.

## “ ஆலயத்திற்கு அளிக்கப்பட்ட அறக்கொடைகள் ”

1. மாறவர்மான் ஸ்ரீ வல்லபன் தேவனின் 31-வது ஆட்சியாண்டில், கல்வெட்டு, இக்கோயிலில் “ ஆகவராமன் ” என்னும் சந்திபூசைச் செலவுகளுக்கும், அட்டமி நாளில் அர்த்தசாம அபிசேகங்களுக்கும் “ தொண்டன்குளம் ” என்னும் கிராமம் அரசனால் வழங்கப்பட்டது. என்பதைக் குறிக்கிறது கோயிலின் மேற்குச் சுவரில் உள்ள இக்கல்வெட்டு அரசனால் சூரிய நாட்டு வரதுங்கதேவநல்லூர் எழுத்து மண்டபத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக குறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டில் “ பூரட்டாதி ” அரசனின் நட்சத்திரமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

2. பாண்டியன் மாறவர்மன் காலத்தில் இந்தக்கோயில் இறைவனின் மாலை வேளை பூசைக்கு “ பெற்றுனேரி ” என்னும் நிலத்தை அரசனால் வழங்கப்பட்டது இந்தக்கல்வெட்டு கோயில் கருவறை மேற்குச் சுவரில் உள்ளது.

3. சடிலவர்மன் திரிபுவன சக்கரவர்த்திவீரபாண்டியத் தேவன் காலத்தில் இக்கோயில் இறைவனுடைய அர்த்தஜாம பூசைக்கும் பங்குனி உத்திர வீழாவின் அபிசேகச் செலவிற்கும் “ தாரான்குளம் ” என்னும் கிராமம் மன்னனால் வழங்கப்பட்டது என்ற செய்தியை கருவறையின் தென்மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டு கூறுகின்றது.

4. பராக்கிரம பாண்டியரின் காலத்தில் சூரிய நாட்டு "பராந்தாக மங்கலப்பற்று" என்னும் ஊரில் உள்ள நிலப் பகுதி வழங்கியவனின் விருப்பப்படியே ஆன்மநாட்டு திருபக வான்பாறை ஆளுடைய நாயனாரின் காலை சந்திக்கு விடப் பட்டுள்ளது.

5. அழகன் பெருமாள் ஆதிவீரராமன் என்ற ஸ்ரீவல்லப தேவன் காலத்தில் ஆன்மநாட்டு பகவான்பாறை நச்சாடை தவிர்த்தருளிய நாயனாரின் விசேஷ பூசைக்கு சேத்தூர் பிடாகையின் மூன்று நிலப்பகுதிகள் அளிக்கப்பட்டது. இந்த நிலப்பகுதியின் ஒரு எல்லையாக "கோவலன் ஊரணி" என்று வழங்கப்படும் கோவிலூர் என்ற ஊரே ஆகும்.

6. மாறவர்மன் திருவல்லபதேவன் இப்பகுதியில் முகாமிட்டுத் தங்கியிருந்தபோது "திருப்பணிபுரம்" என்னும் கிராமத்தை கோயிலுக்கு வழங்கியதை மற்றுமொரு கல்வெட்டு குறிக்கிறது இந்தக்கல்வெட்டு கோயில் முன்மண்டப வடக்குச் சுவரில் உள்ளது.

7. இதைத்தவிர தாரான்குளம், திருப்பரைபுரம்,தொண்டன்குளம், புதுவூர், பெற்றுனேரி, முதலியவை இக்கோயிலுக் கென்று பல்வேறு காலங்களில் கொடுக்கப்பட்ட தேவதானச் சிற்றூர்களாகும்.

மேலே குறிப்பிட்ட கல்வெட்டுச் செய்திகள் உட்பட மொத்தம் 14 கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுச் செய்திகளில் இருந்து, 14, 15, 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்னர்களின் தெய்வீக உணர்ச்சியையும், அருள் உள்ளங் களையும், அறக்கொடைகளையும், மன்னரால் கோயிலுக்கு பல்வேறு காலங்களில் அளிக்கப்பட்ட நிவந்தங்களின் விபரங் களும் தெரிய வருகின்றன.

## "திருக்கோயில் நிர்வாகம்"

இந்தத்திருக்கோயில் நிர்வாகப் பொறுப்பைப் பரம்பரை அறங்காவலர்களாக,சேத்தூர் ஜமீன்வாரிசைச் சேர்ந்தவர்கள்

அறங்காவலர்களாக இருந்துகோயில் காரியங்களை கவனித்து வருகின்றார்கள் தர்மகர்த்தாக்கள் மற்றும் தற்போதுள்ள பரம்பரை அறங்காவலர் திரு வி. டி. எஸ். சிவப்பிரகாசத்தேவர் என்ற துரைராஜ் குமார் அவர்கள் ஆகிய அனைவரும் தெய்வ பக்தியும், தமிழ்ப்பற்றும், இசைப்பயிற்சியும் உடையவர்கள் இத்திருக்கோயிலின் நிர்வாகம் தமிழ்நாடு, இந்துசமய அற நிலைய ஆட்சித்துறை ஆட்சிக்குப்பட்டது. முதல் நிலை செயல் அலுவலர் இங்கு பணியாற்றி வருகிறார்.

சேத்தூர் சமஸ்தானம் ஆதிசின்மயத்தேவர் அவர்கள் மரபில்தோன்றி திரு சுந்தரபாண்டியத்தேவர் அவர்கள் குமாரர் திரு சின்மயத்தேவர் அவர்களால் கோயில் மணி மண்டபம் முதலானவைகள் அமைக்கப்பட்டன. சின்மயத்தேவர் அவர் களுக்குப்பின் முத்துச்சாமித்தேவர் அவர்களாலும், சுந்தரத் தேவர் அவர்களாலும்அவர்களுக்குப்பின்பு சேவுகப்பாண்டியத் தேவர் அவர்களாலும், அவர்களுக்குப்பின் திரு தியாகசுந்தர தாஸ் தேவர் அவர்களாலும் ஷெ நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது இப்போது அவர்களுக்குப் பின்பு பரம்பரை அறங்காவலராக இருந்து கோயிலை பராமரித்து வருபவர் திரு **V. T. S.** சிவப் பிரகாசத்தேவர் என்ற துரைராஜ்குமார் என்பவர் ஆவார்.

## இறைவழிபாட்டு முறை

பிறவிப் பெருங்கடலில் நீந்திக் களிக்கின்ற மனித உள்ளங்கள் எண்ணற்ற துயரங்களுக்கு ஆளாகின்றன. பிறந்த குறிக்கோளைமறந்து மனம்போன போக்கில் இன்றைய மனிதன் வாழத் தலைப்பட்டுவிட்டான். ஆனால் அன்றைய மாந்தனோ தெய்வ உணர்வு ஒன்று மட்டுமே தன்னைக் காக்கும் தன்மையது என்றுமுழுமையாக நம்பினான் அப்படி ஆழியலைத் துரும்பென அல்லற்படும் மனித உயிர்கள் அமைதி நாடிச்சொல் லும் இடங்களே ஆலயங்கள். அந்த ஆலயத்தின் நாயகனாக இறைவன் வீற்றிருக்கின்றான் அந்த இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாத விழுப்பம் உடையவன் அவனிடம் நமது குறைகளைச்சொல்லியழுதால்அவன் அருளைப்பெறலாம் இதை மணிவாசகர் "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்கின்றார் அவ்வாறு இறைவனுடயை ஆலயங்களுக்குச்

செல்லும் மாந்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறை களை நமது முன்னோர் செவ்வனே வகுத்துத்தந்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றைத் தருதல் நலம்.

1. ஆலயஞ்செல்ல விரும்புவோர் முதலாவதாக தமது உடம்பையும் உடைகளையும் சுத்தஞ்செய்துகொள்ளவேண்டும் உபநயனம் தீட்சை பெற்றுள்ளவர்கள் அதற்குரிய அனுட்டானங் களைச் செய்துகொள்ள வேண்டும்.

2. ஆலயத்தினுள்ளே செல்வோர் அனைவரும் கட்டா யமாக சிவ அடையாளங்களாகிய திருநீற்றை நெற்றியிற் சுற்றிச் செல்லவேண்டும்.

3. கோயிலுக்குச் செல்வோர்கள் வெறுங்கையோடு செல்லாது, தேங்காய், கற்பூரம், பழம், மலர், போன்ற பொருள் களைத் தங்களால் இயன்ற அளவு எடுத்துச்செல்லவேண்டும்.

4. அவ்வாறு எடுத்துச் செல்வோர் முதலில் விநாயகப் பெருமானை வணங்கி, அவரது அருளைப் பெற்ற பின்பே கொடிமரத்தண்டே செல்லவேண்டும்.

5, விநாயகர் அருளைப் பெற்று உள்ளே செல்லு முன்னர் கொடிமரத்தருகில் நின்று தொழவேண்டும். அவ்வாறு தொழும்போது கவனம் சிதையக்கூடாது.

6. கொடிமரந் தாண்டி கோயிலுக்குள்ளே செல்வோர் கள் உட்பிரகாரத்தில் இருமுறை வணங்கி, மெதுவாக அடிமேல் அடிவைத்து அமைதியாகக் கடந்து செல்லவேண்டும்.

7. உட்பிரகாரத்தை வலம் வந்து முடிந்த பின்னர் மகா மண்டபம் சென்று, கொண்டுவந்த தேங்காய், பழம் முதலியவற்றை நிவேதித்து கற்பூரம் பணிவடைசெய்து திருநீறு வாங்கி தரித்தல் வேண்டும்.

8. இறைவனைத் தெரிசித்து, திருநீறு சாற்றிய பின்பு அர்ச்சகருக்கு இயன்றளவு தட்சணை கொடுத்து முன்போல் மீண்டுமொருமுறை வணங்கி வெளியில் வரவேண்டும்.

9. கடைசிச் சுற்றின்போது கன்னி மூலையில் உள்ள விநாயகரை முன்போல் குட்டி வழிப்பட்டு சண்டிகேஸ்வரரை வணங்கிச்செல்லவேண்டும்.

10. சண்டிகேஸ்வரரை வணங்கும் அன்பர்கள் கை தட்டியோ, முடைநாற்றம் வீசுகின்ற ஆடையின் நூலையோ எடுத்துப்போடக்கூடாது.

11. இறுதியாக பைரவரைத் தரிசனம் செய்யவேண்டும் அதன் பின்பு அடியார்கள் வெளிவந்து கொடி மரத்தண்டை உட்கார்ந்து கூடிய வரை செபம் செய்யவேண்டும்.

**சில செய்திகள் :**

இவ்வாறு நாள் தோறும் அன்போடும், அறிவோடும், விதிமுறை தவறாமலும், நியாயமாக ஆலயம் தொழுபவர் அதாவது

“ உறவு கோர் ஒட்டு உணர்வுக் கயிற்றினுல்
முருக வாங்கிக் கனப்பமுன் நிற்குமே ”

என்ற உள்ளம் படைத்தவர்கள்.

“ கிறியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமென கினகும் நூலே ”

என்று உண்மைப்படி வணங்கவேண்டும் மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு 15 நிமிடமாவது மனதை ஒருநிலை படுத்தி இறைவனை வணங்க முயற்சிக்கவேண்டும்.

சில மனிதர்கள் விழி மட்டும் திறந்து இருக்கும் பேராசை பிடித்த மனம் மட்டும் எங்கெங்கோ அலைந்து தடுமாறும், இந்த நிலை உள்ளவர்கள் முழுமையான இறையின்பத்தைப்பெற முடியாது என்பார் பட்டினத்தடிகள்.

“ கையொன்று செய்ய விழியொன்று நாட
கருத்தொன் றெண்ண
பொய்யொற்று வஞ்சக நாவொன்று புகல
புலால்கமழும்
மெய்யொன்று சார செவிஒன்றுகேட்க
விரும்புமியான்

செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய்வினை
தீர்த்தவனே !!

என்று பாடுகின்றார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி; போன்ற ஐம்பொறிகளையும்கட்டுப்படுத்தும் முகத்தான்,ஆலயங்களில்வழிபாட்டுச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மெய் : 'மெய்' என்ற பொறியை சந்தனம். வாசனைத் திரவியங்கள் மூலம் மனிதனின் மனத்தை இறைவன் பக்கம் திருப்பவே ஆலயங்களில் பயன்படுத்துகிறார்கள்.

வாய் : 'வாய்' என்ற பொறிசுவைக்கும் தன்மையுடையது இப்பொறியைக் கட்டுப்படுப்படுத்த ஆலயங்களில் தீர்த்தம், பிரசாதங்களைப் பயன்படுத்துகின்றனர்.

கண் : மனிதனின் கண்ணானது வேறு பக்கம் திரும்பாமல் இருக்க, ஆண்டவனை அலங்காரம் செய்கின்றனர். இது கண் என்ற பொறியை தன் பக்கம் இழுக்க செய்யும் உத்தி.

மூக்கு : ஊதுபத்தியின் மூலம் வருகின்ற நறுமணம் மூக்குப் பொறியை கட்டுப்படுத்தி இறைவன் பக்கம் திருப்புகிறது

செவி : தேவையற்ற ஓசைகளுக்கு அலையும் செவிப் பொறியைஇறைவன் பக்கம் திருப்பவே கோயில்களில் மேளங்கள் தட்டவும், ஆலய மணிகளை ஒலிக்கச் செய்வதும் ஆகும்.

ஆலயங்களில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு செயலுக்கும் தத்துவம் உண்டு.

**தீர்த்தங்கள் :**

'தேவதானம்'என்னும் திருக்கோயிலுக்குச்செல்வோர்கள் தருமாசலம் என்னும் மலையிலிருந்து ஓடிவரும் கோரயாற்றில் நீராடி பாவங்களை அழித்தலால் அதற்கு "அகோர நதி" என்னும் பெயர் ஏற்பட்டது. இந்த நதி உமையும் கங்கையும் தவம் செய்த நதி. இந்த நதிக்கு.

1. பிரம தீர்த்தம் 2. சர்வ தீர்த்தம்
3. கோர தீர்த்தம் 4. முத்துத் தீர்த்தம்
5. தேவி தீர்த்தம்

என்று பெயர்கள் வழங்கி வருகின்றன. இந்த கோரயாற்றில் இருந்து பல தீர்த்தங்கள் உருவாகின்றன.

1. சதுர்ச்சனை 2. கீழருவி 3. கன்னி தீர்த்தம்
4. குயவரி தீர்த்தம் 5. சண தீர்த்தம்
6. காருத்த தீர்த்தம் 7. பூத தீர்த்தம்
8. சுழுக்க தீர்த்தம் 9. சங்க தீர்த்தம்
10. நகரி தீர்த்தம் 11. யார்த்த தீர்த்தம்

போன்ற தீர்த்தங்கள் ஆகும். இந்தக் கோரயாற்றுக்கு பச்சை யாறு, நீராறு, தேனியாறு, என்னும் பெயர்களும் வழங்கும்.

## துதிப்பாடல்கள்

"சேறைத் தலபுராணத்தில் இருந்து எடுக்கப்பெற்றவை"

"விநாயகப்பெருமான்"

*தந்தைதிரு மேனியொரு பாதியெனுந் தாய்வெப்பந்*
*தவிர்த்து நாளும்*
*சிந்தைகளி கூரவிரு திறத்தவர்சென் னியிற்குலவு*
*நிரைநர்க் கங்கை*
*நிந்தைதரு தருக்கழியப் புழைக்கரத்தான் கந்தினை*
*நிரம்பச் செய்யும்*
*முந்தைமுதற் பொருளாய முத்திவிநா யகனடியை*
*முடிமேற் கொள்வாம்.*

முருகப் பெருமான்

*தடமருவும் வெள்ளிமலை மிசையிருந்து பொன்மலையைத்*
*தனுவாக் கொண்டோன்*
*இடமருவும் இமயமலை உதவுபசுங் கொடிமுலைப்பால்*
*இனிதின் உண்டோன்*
*அடமருவும் சுவுணர்கெட செய்துமுனக் கியனுவலை*
*அடைவு முன்னோன்*
*திடமருவுந் தேவிதவத் துணையான ஆறுமுகனைச்*
*சிந்தை செய்வாம்.*

## நடராசர் (ஆடவல்லான்)

வடராச பணியதனிற் கண் துயிலும் திருமாலும்
வரிவள் வண்டு
தொடராச னக்கமலம் வாழ்பவனின் முன்தேடத்
தோன்றா னாகி
இடராச கலும்புலியும் எழிலரவும் மனமகிழ்ந்த
இறைஞ்ச நாணம்
நடராச பதியான பரம்பொருளின் இருபதத்தை
நவிற்றி உய்வாம்.

## நந்திதேவர்

ஈசன் நந்தி முதுகில் எழுபிர
காச நந்தி வணங்கி ஞன்மதன்
பூச நந்தி செய்த புங்கவன்
வாச னந்தி மலரடி வாழ்த்துவாம்.

## சம்பந்தர்

பொருந்திருக்கை யுகழ்கடந்த பொருந்திருக்கை பெற்றவனம்
புயன்சூழ் பாவத்
தீருந்திருக்கை உடையவனே கடவுளென உலகமெல்லம்
இறைஞ்சி வாழ்த்தப்
பெருந்திருக்கை யுறுசமணர் கழுவேறக் கமலமெனப்
பிறங்கும் தூய
வரும்திருக்கை உமைமுலைப்பால் அருந்திருக்கை உமிழ்ந்தலனை
அகத்துள் வைப்பரம்.

## அப்பர்

பொருமலையும் இருமலையும் தும்மலையும் பாவமதாய்ப்
புத்தி மீதே
வருமலையும் இறுதியில்யா வரும்லையும் படிமறலி
வந்து சீறும்
பெருமலையும் நீத்தளஞர் கம்மலையும் செம்மலையே
பேணி முன்னம்
திருமலையும் பரிவிருந்து திருமலையுந் தியைநீத்தான்
சிந்தை செய்வாம்.

### சுந்தரர்

கருமதவ அடியார்கள் தமகசற்றி அருள்சரந்த
கயிலை வாழும்
ஒருமுதலை ஏவலுங்கொண் டவிநாசியெனுநகரில்
ஓரகத் தோர்
பெருமலையும் நீத்தயஞர் கம்மலையும் செம்மலையே
போந்த பாடிப்
பெருமுதலை சாபதணிற் சிறுமதலை யழைத்தானை
பணிதல் செய்வாம்.

### மாணிக்கவாசகர்

விக்கியரை யினிற்புலித்தோர் உமைமுலைதோ யுங்கடவுள்
மீதே பாடும்
டொக்கியரை ஒரு முங்கை தனைப்பேச வைத்தவரை
மம்மர் மேவும்
சாக்கியரை வாதுபுரிந் தவர்சமயத் கோட்பர்ட்டின்
தருக்க மெல்லாம்
போக்கியரை நொடியில்வென்ற வாதவூர்த் தேசிகரைப்
போற்றி வாழ்வாம்.

### சண்டிகேஸ்வரர்

மாதையொரு கூறுடையான் தன்கழலே பெரிதெனவும்
மகிழ்ச்சி பூத்துச்
சோதியுனும் வாலுகத்தார் சோதியினைபூசிக்கதி
துணிவு கொண்டு
பேதையெனும் விப்பிரனும் பெருமான்தன் பாற்கலசம்
பின்ன மாக்கும்
தாதைசரண் தடிந்தகண் டிசர்பதம் பெற்றபிள்ளை
சரண்மேற் சொற்வாம்.

### வாழ்த்து

மாதம்மும் மாறி பெய்க மறையவர்
வேத வேள்வி விளங்கச் சிவாகமம்
பூதி சாதனம் ஓங்க இப்பூதலம்
நீதி மன்னவர் செங்கோ னிப வாழ்கவே.

மடங்கள் ஆலயம் பூசைகள் மன்றுக
தடங்கள் தோறும் சலந்தழைத் தாடுக
இடங்கள் தோறும் இத்திரன் கேள்வபோல்
திடங்கொள் சேறை திருவன் சிறக்கவே.

பூவிருந் தெய்த தானமும்வாழி
பொலிதரும் சேறைவும் வாழி
நாவரும் பழமா மறைகளும் வாழி
நரபதி நீதியும் வாழி
வெரும் புகழ்சவ காசமும் வாழி
இசைபெறு புராணமும் வாழி!
தேவரும் பரவும் தொண்டரும் வாழி
சிவனருட் சின்மயன் வாழி,

## பயன்

திருமணலக் கொழுந்தர் மேவும்
சேறையிற் தலபு ராணம்
கருதியே படிப்போர் கேட்போர்
கையினார் எழுதச் செய்வோர்
அருள்சய பரிசனர் தான
சுள்கையர் கோன்வாழி செய்தீப்
உருவரன் பிறவி நீத்து
பரமன்தாள் பெறு வரன்றே.

(இறுதி நான்கு பாடல்கள் முன்னால் ஜமீன்தார் ஸ்ரீ சுந்தரதாச மகாராசா அவர்கள் இயற்றிய சேறைப் பதிகம்)

## வாழ்த்து

சீராரும் தெய்வவனம் சிறக்க அன்று
செகமெல்லாம் அருள்செய்து சிரித்து வாழும்
பேராரும் நச்சாடை தவிர்த்த சுவாமி
பெரியதவம் பெற்றவொரு நங்கை பாதம்
ஒராரும் மாந்தளால் இருந்து; நெஞ்சம்
இனகிடவே தெண்டனிட்டார் இதயமெல்லாம்
காராரும் இருளகலும்; கடவுள் செய்யும்
கருணையெனும் மழையொழிம் காண்பின் காண்பின்

முற்றும்



ஸ்ரீ ஷண்முகா பிரிண்டர்ஸ், சிவகிரி.